# குடிக்க குடிநீர் - பார்க்க வெளிச்சம் - நடக்க பாதை - இருக்க வீடு - மக்கள் அடைகின்ற வரை எங்களின் பயணம் தொடரும்!

பேரவையில் – அமைச்சர் இ.பெரியசாமி பதிலுரை.... 8 ஆம் பக்கத் தொடர்ச்சி

**குடிநீர்த் திட்டம்!**

குடிநீர்த் திட்டம்; இத்திட்டத்தைப் பொறுத்தவரையில், இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு—ஊரகப் பகுதிகளில் water tanks இருந்தன. உங்களுக்குத் தெரியும்; அங்குள்ள water tanks அனைத்தும் வேளாண்மைத் துறை அவர்களைப் போன்று குள்ளமாக, குட்டையாக இருந்தன; 6 மீட்டர் உயரம்தான் இருந்தது. நமது அரசு பொறுப்பேற்றவுடன் அதன் உயர்த்தை 12 மீட்டராக்கியது. தற்போது எங்கு பார்த்தாலும் water tanks 12 மீட்டர் உயரத்தில் இருக்கின்றன. 5,600 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, தற்போது 4,500 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. நம்முடைய முதலமைச்சர் , கிராமங்களில் 1,200 புதிய நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டுவதற்கு இந்த ஆண்டும் அனுமதி வழங்கியிருக்கிறார்கள் என்கிற இனிப்பான செய்தியை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

இதுமட்டுமின்றி, தமிழகத்திலுள்ள ஊரகப் பகுதிகளில் வாழ்கின்ற 1 கோடியே 25 இலட்சம் குடும்பங்களுக்கும் தண்ணீர் வழங்க வேண்டும் என்பதற்காகத்தான் மத்திய அரசின் ஜல்ஜீவன் திட்டம் மற்றும் ஊரகப் பகுதிகளில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் செயல்படுத்தப்படும் Comprehensive water scheme ஆகியவை செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதுவரையிலும் 1 கோடியே 25 இலட்சம் குடும்பங்களில் 1 கோடியே 10 இலட்சம் குடும்பங்களுக்கு குடிநீர் வசதி செய்துதரப்பட்டுள்ளன என்பதை நான் இந்த அவையில் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

நீங்கள் அனைவரும் PMAY திட்டத்தைப் பற்றி பேசினீர்கள். பிரதம மந்திரி வீடுகள் கட்டும் திட்டத்தைப் பற்றி நான் இந்த சபையில் சொல்லியாக வேண்டும்.

இதில் பிரதமர் வீடு கட்டும் திட்டத்தில் 60:40 என்றிருக்கிறது. இதில் இரண்டு தவணைகளை பெற்றும் வீடு கட்ட முடியாமல் இருக்கிறார்கள்; கஷ்டப்படுகிறார்கள் என்று இங்கே உறுப்பினர் ம. சிந்தனை செல்வன் தெரிவித்திருக்கிறீர்கள். அவர்களை கவனிக்க வேண்டிய கடமை அரசுக்கு இருக்கிறது. நீங்கள் சொன்னதை என்னிடம் தெரிவித்தார்கள். தற்போது பிரதமர் வீடு கட்டும் திட்டத்தில் ஒன்றிய அரசு 1,20,000 ரூபாய்தான் கொடுக்கிறார்கள். நாம் சுமார் 1,70,000 வரை கொடுக்கிறோம். இதில் ஒன்றிய அரசினுடைய பங்கு 60 சதவிகிதம். மாநிலம் கொடுக்க வேண்டிய பங்கு 40 சதவிகிதம் என்றிருக்கிறது. ஆனால் 60:40 என்பது மாறியிருக்கிறது. தற்போது என்ன நடக்கிறது என்றால், ஒன்றிய அரசு 1,20,000 ரூபாய்க்கு மேல் பணம் கொடுக்காததால், மாநில அரசின் பங்காக 61 சதவிகிதம் வழங்க வேண்டியிநிலையிருக்கிறது.

இங்கே எதிர்க்கட்சியில் இருக்கின்ற அத்தனை உறுப்பினர்களுக்குத் தெரியும். பிரதமர் வீடு கட்டும் திட்டம் கொண்டு வரப்பட்டு ஏறத்தாழ 8 ஆண்டுகள் ஆகின்றது. உறுப்பினர் S.S. பாலாஜி கூட இதுகுறித்து பேசினார். 8 ஆண்டுகள் கடந்த நிலையில் இன்றைக்கு இருக்கக்கூடிய செங்கல், சிமெண்ட், ஜெல்லி ஆகியவற்றின் விலைவாசி என்ன? எவ்வளவு கஷ்டமிருக்கிறது. ஆகையால், இன்றைக்கு இருக்கக்கூடிய விலைவாசிக்கு ஏற்றாற்போல், ஒன்றிய அரசு அதனை உயர்த்த வேண்டுமென்று நாங்களும் வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். மூன்றரை இலட்சம் ரூபாய் நீங்கள் தர வேண்டுமென்று நான் ஒன்றிய அரசை கேட்டுக்கொண்டேன். ஒன்றிய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் சிவராஜ் சிங் சவுகான் அவர்களிடமும் இதுகுறித்து கோரிக்கை வைத்தோம். ஒரு வீட்டிற்கு 1,20,000 ரூபாய் என்று நிர்ணயித்து 8 ஆண்டுகள் ஆகின்றது. ஒன்றிய அரசு ரூ.1,20,000 கொடுக்கிறது; மாநில அரசு 1,72,000 ரூபாய் கொடுக்கிறது. இதனை உயர்த்த வேண்டுமென்று கேட்ட பிறகும் ஒன்றிய அரசாங்கம் இன்னமும் மௌனமாகத்தான் இருக்கிறார்கள். தற்போது ஒன்றிய அரசினுடைய நிலை என்ன என்பது தெரியவில்லை. ஆக, இந்த நிதிப் பங்கீடுகளில் சரியான நடைமுறை பின்பற்றவில்லை.

இன்னொன்றை சொல்லவேண்டுமென்றால், பழங்குடியினர், மலைவாழ் மக்கள், குறும்பர், தோடர், ST மக்களுக்கு என்று மொத்தமாக அனைவருக்கும் சேர்த்து சொன்னால், வீடு கட்டுவதற்கு 2 இலட்சம் தரப்பட வேண்டும். அந்த இரண்டு இலட்சம் ரூபாயில் ஒன்றிய அரசு ரூ.1,20,000 கொடுக்க வேண்டும்; மாநில அரசு ரூ.80,000 கொடுக்க வேண்டும். மலைகளில் அந்தத் தொகையைக் கொண்டு வீடு கட்ட முடியாது. ரூ.5 இலட்சத்திற்கு மேல் தேவைப்படுகிறது. நம்முடைய முதலமைச்சர் , பழங்குடியின மக்களுக்காக ரூ.80,000 மட்டுமல்லாமல் மீண்டும் ஒரு 3 இலட்சம் ரூபாயை சேர்த்து முதலமைச்சர் கொடுத்திருக்கிறார். ஆக, 5 இலட்சம் ரூபாய் கொடுத்து இன்றைக்கு வீடுகளை நாம் கட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் அதற்கு பெயர் என்ன தெரியுமா? Prime Minister's JANMAN. பழங்குடியின மக்களுக்கு எவ்வளவு தாராளமாக நிதியை அள்ளிக் கொடுக்கின்றார்கள் என்பதை நீங்கள் நினைத்துப் பார்க்க வேண்டும். அதையும் மாநில அரசுதான் சுமக்கிறது.

இப்படி எல்லாவற்றிலும், மாநில அரசுக்கு வரவேண்டிய நிதிப் பங்கினை பற்றி நான் பேசவில்லை. இத்திட்டத்தில் ஒன்றிய, மாநில அரசுகளின் பங்கீடு என்பது 60:40 என்று இருக்க வேண்டும். ஆனால் Percentage போட்டுப் பார்த்தால், நம்முடைய முதலமைச்சர் பழங்குடியின மக்களின் வீடு கட்டும் இந்தத் திட்டத்திற்காக 75 சதவிகிதம் நிதியை தாராளமாக அள்ளி வழங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தியை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

## 1.25 இலட்சம் ‘கலைஞர் கனவு இல்லம்’ திட்ட வீடுகள் அடுத்த ஆண்டு மார்ச்சுக்குள் கட்டி முடிக்கப்படும்!

**தூய்மை காவலர்களுக்கு ஊதிய உயர்வு!**

இன்னும் இங்கே இருக்கின்ற உறுப்பினர்கள் தூய்மை காவலர்களைப் பற்றி சொன்னீர்கள். தூய்மை காவலர்களுக்கு நாங்கள் 3,600 ரூபாயிலிருந்து 5,000 ரூபாயாக உயர்த்தினோம். தற்போது தண்ணீர் தொட்டி இயக்குபவர்களுக்கெல்லாம் நீங்கள் சம்பளம் உயர்த்த வேண்டுமென்று கேட்டிருக்கிறீர்கள். கண்டிப்பாக, நம்முடைய முதலமைச்சர் அவரிடத்திலே கலந்துபேசி நிச்சயமாக tank operatorகளுக்கு சம்பளம் உயர்த்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த அவையில் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல், தூய்மை காவலர்களும் இரவு பகலாகப் பாடுபடுகிறார்கள். அவர்களுக்கும் சம்பளம் உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். இதுபோக, இங்கே பேசிய உறுப்பினர்கள் தேர்தல் நடத்த வேண்டும் என்று சொன்னார்கள். தேர்தலை நாங்கள் நடத்த தயாராகத்தான் இருக்கிறோம். பஞ்சாயத்தினுடைய சீரமைப்புப் பணிகள் நடைபெறுவதாக நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் தெரிவித்திருக்கிறார். 380 ஊராட்சிகளுக்கு மேல் சேர்க்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். ஊராட்சி ஒத்துக்கொண்டது. நாம் ஏற்கெனவே இந்தச் சபையில் வாக்குறுதி கொடுத்திருக்கிறோம். அதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது.

அதைப்பற்றி இரண்டு, மூன்று கூட்டங்கள் நடத்தப்பட்டு ஆங்காங்கே இருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து கருத்துரு பெறப்பட்டு, ராஜேஷ் கூட சொல்கிறார், சேர்க்கக்கூடாது என்ற சொல்கிறார்.

நேற்றுகூட நீங்கள் அறிவித்தீர்கள். கருத்துரு கேட்கப்பட்டு கிட்டத்தட்ட இப்போது ஒரேயொரு விஷயத்தைச் சொல்லிவிடுகிறேன்.

நம்முடைய 385 ஊராட்சிகளில் 120 ஊராட்சியில்தான் ஓரளவிற்கு ஆட்சேபணை இல்லாமல் இருக்கிறது. சிலபேர் என்ன நினைக்கிறார்கள் என்றால், அவரவர்கள் மாவட்டம் என்று வருகின்றபோது, தஞ்சாவூர் மாவட்டம் என்றால், அந்த Collector 10 ஊராட்சிகள் இருக்கிறது என்றால் எதையும் எடுக்கக்கூடாதுஅதுதான், இந்த நிலைதான் நீடிக்கிறது. என்னைப் பொறுத்தவரையில், மாநகராட்சியோடு ஊராட்சிகள் உட்பகுதியில் பல இடங்களில் இருக்கின்றது. நான் ஏற்கெனவே இதே சபையில் சொல்லியிருக்கிறேன்.

தூத்துக்கு டியில் மாப்பிள்ளையூரணி ஊராட்சி, அதன்பிறகு Collector Office அமைந்திருப்பது இவையெல்லாம் townக்குள் வந்துவிடுகிறது. அதையெல்லாம் ஏற்றுதான் ஆகவேண்டும்; வேறு வழியில்லை. நம்முடைய சண்முகையா அவர்களும் கேட்டுக்கொண்டுதான் இருக்கிறார்கள். அதையெல்லாம் சேர்க்கக் கூடாது என்று சொல்கிறார்கள்; அது அவருடைய view. அதாவது அனிதா view, சண்முகையா view. இப்போது ஒருங்கிணைந்து கூட்டங்களை நடத்தி, சீரமைப்பு பணியில் எல்லோருடைய கருத்தையும் அறிந்து, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய கருத்துருவினைப் பெற்று, அதன்பின்னர் நம்முடைய நகராட்சி நிர்வாகத் துறையின் அமைச்சருடன் நாங்களெல்லாம் உட்கார்ந்து பேசி, எதை எதை சேர்க்கலாம்; பகுதி வரக்கூடியதெல்லாம் பெரும்பாலும் சேர்க்கப்பட்டுவிடும். முழுமையாக வரக்கூடியதில் எதை, எதை சேர்க்கலாம்; எதை, எதை நீக்கலாம். அவர்களுடைய விருப்பத்தை அறிந்து, அவர்களுடைய கருத்தை அறிந்து நிச்சயம் வேகமாக முடிவெடுக்க ப்படும் என்பதை மட்டும் திட்டவட்டமாக நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஏனென்றால் நிறைய பேர் அதில்தான் கருத்து சொல்லியிருக்கிறார்கள். இப்போது நம்முடைய பாலாஜி ஒன்றையொன்றை மட்டும் பேசினார்கள். தான் சுகாதாரத் திட்டத்தைப் பற்றி பேசினார்கள். அதில் நகராட்சித் துறையினைப் பொறுத்தளவில் விரிவாக சில நடவடிக்கைகள் எல்லாம் எடுத்திருக்கிறார்கள். நான் கடந்த முறை கூட இதே அவையில் அறிவித்தேன். நாங்களும் நகரத்தையொட்டி ஓர் அமைப்பை ஏற்படுத்தி, அந்த திடக்கழிவு, திரவக்கழிவை (குறுக்கீடு) அது புரிகிறது. அதையெல்லாம் ஏற்படுத்தி அருகாமையில் அமர்த்தி சேர்க்க வேண்டுமென்று கேட்கிறார்கள். சொல்வது மக்கள் நலப் பணியாளர்கள். மக்கள் நலப் பணியாளர்களைப் பொறுத்தளவில், ஏற்கெனவே முதலமைச்சர் அவர்களிடத்தில் இதுகுறித்து பேசிக் கொண்டிருக்கிறோம். அதுசம்பந்தமாக விரைவில் முடிவெடுக்கப்படும்.

பொதுவாக இந்தத் துறையைப் பொறுத்தவரையில், நான் நினைப்ப தெல்லாம் குடிக்க தண்ணீர், பார்க்க வெளிச்சம், நடக்க பாதை, இருக்க வீடு. இதை அடைகின்றவரை எங்களுடைய பயணம், எங்களுடைய முதல்வர் அவர்களுடைய பயணம் தொடர்ந்துகொண்டே இருக்கும்.

எங்களுடைய இயக்கத்தைப் பொறுத்தவரையில் பெரியார் அவர்களது பெயரால் ‘பெரியார் நினைவு சமத்துவபுரம்’, அண்ணா அவர்களது பெயரால் ‘அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்’, கலைஞர் அவர்களது பெயரால் ‘கலைஞர் கனவு இல்லம்’. எங்களுடைய திராவிட மாடல் நாயகர், அதிலும் குறிப்பாக சொன்னார் ‘எல்லார்க்கும் எல்லாம்’ என்ற அந்த நீதியை இன்றைக்கு கடைப்பிடித்து, எல்லா மக்களுக்கும் சமமாக கிடைக்க வேண்டுமென்ற அந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கிற எங்களுடைய முதல்வர் பெயரால் ‘முதல்வரின் கிராம சாலை மேம்பாட்டு திட்டம்’. முதலமைச்சர் என்றால், அதற்கு ஒரு அழகு இருக்கிறது. அந்தச் சாலையும் அழகாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

மக்கள் வரவேற்கிறார்கள்; கலைஞர் கனவு இல்லத்தினையும் வரவேற்கிறார்கள். ஏனென்றால், சில பேர் இந்தத் திட்டம் இப்படி வந்துவிட்டதே, இந்த roadம் வந்துவிட்டது. இனிமேல் ஒரு கிலோ மீட்டருக்குமேல் எங்கு பார்த்தாலும் முதல்வரின் கிராம சாலை மேம்பாட்டு திட்டம். இன்னும் ஓர் ஆண்டு காலத்திற்குள் சாலைகள் இணைக்கப்பட்டு, எங்கு பார்த்தாலும் முதலமைச்சரின் கிராமச் சாலை திட்டம் ஜொலிக்கும்; கனவு இல்லம் எங்கு பார்த்தாலும் ஜொலிக்கும்; தேர்தல்களிலே வாக்குகளும் ஜொலிக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) நிச்சயமாக 200 சட்டமன்றத் தொகுதிகளையும் திராவிட முன்னேற்றக் கழகம் கைபற்றும். (மேசையைத் தட்டும் ஒலி)

உறுப்பினர்கள் மொத்தம் 315 வெட்டுத் தீர்மானங்களை கொடுத்திருக்கிறீர்கள். அவற்றையெல்லாம் குடிநீர், பஞ்சாயத்துகளைப் பிரிப்பது, சேர்ப்பது பேரூராட்சியாக தரமுயர்த்துவது பற்றியெல்லாம் கேட்டிருக்கிறீர்கள். அவற்றையெல்லாம் பரிசீலித்து நிச்சயமாக நடவடிக்கை எடுக்க அரசு தயாராக இருக்கின்றது என்பதை நாங்கள் கவனத்தில் வைத்திருக்கின்றோம். குடிநீர் தொட்டிகள் கேட்டிருக்கிறீர்கள். எல்லா வசதிகளும், எல்லா roadம் கொடுக்கப்படும்.

குடிநீர்த் தொட்டி கட்டிக் கொடுப்போம். எல்லாவற்றையும் கொடுப்போம். நீங்கள் கேட்கிற அனைத்தையும் நிச்சயமாக, ஊரக வளர்ச்சித் துறை முழுமையாக நிறைவேற்றித்தரும். கடைசியாகப் பேசிய உறுப்பினர் எஸ்.பி. வெங்கடேஸ்வரன் , வனத் துறை சாலையைப் பற்றி கேட்டார்கள். எஸ்.பி. வெங்கடேஸ்வரன் கண்டிப்பாக, எங்களுடைய ‘Pooled assigned revenue’ லிருந்து நாங்கள் பணத்தைக் கட்டி, உங்களுக்கு சாலையைப் போட்டுக் கொடுத்துவிடுகிறோம். நீங்கள் கவலைப்படாதீர்கள்.

அறிவிப்புகளைப் படித்துவிடுகிறேன். நம்முடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால், கிட்டத்தட்ட 1,891 ஊராட்சி மன்றக் கட்டடங்களும், 98 ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களுக்கான கட்டடங்களும் கட்டப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு, மீண்டும், முதலமைச்சர் 500 கிராம ஊராட்சிகளுக்கு அலுவலகக் கட்டடங்கள் புதிதாகக் கட்டப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள்.

ஊரக வளர்ச்சித் துறையினுடைய அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, ஊரக வளர்ச்சித் துறையினுடைய இயக்குநர் பி. பொன்னையா, அவர்களும் மற்றும் துறையினுடைய மற்ற அலுவலர்களுக்கும், எனக்கு உதவியாக இருந்த அனைத்து அலுவலர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நீங்கள் கொடுத்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களை திரும்பப்பெற்று, ஊரக வளர்ச்சித் துறையினுடைய மானியத்தை நிறைவேற்றித்தர உங்களை பணிவன்போடு கேட்டு, அமர்கின்றேன்.

இவ்வாறு அமைச்சர் இ.பெரியசாமி பதிலுரை வழங்கினார்.

---

## ரூ.800 கோடியில் உயர்மட்ட மேம்பாலங்கள்! 500 கிராம ஊராட்சி அலுவலகங்களுக்கும் 500 அங்கன்வாடிகளுக்கும் புதிய கட்டிடங்கள்!

# ரூ.500 கோடியில் ஊரகப் பகுதிகளில் இயற்கை நீர்வளப் பணிகள்!

## சட்டப்பேரவையில் – ஊரக வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கை பதிலுரையில் – அமைச்சர் இ.பெரியசாமி 20 அறிவிப்புகளை வெளியிட்டார்!

**சென்னை, மார்ச், 28 -**

**சட்டப்பேரவையில் ஊரக வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கை பதிலுரையில் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி அடுக்கடுக்கான 20 அறிவிப்புகளை அறிவித்தார்.**

**1. 500 கிராம ஊராட்சிகளுக்கு அலுவலகக் கட்டடங்கள் புதிதாக கட்டப்படும்**

ஊரக மக்களுக்கு சிறப்பான சேவை வழங்குவதற்காக பழுதடைந்த நிலையில் உள்ள 500 ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள் 157 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படும்.

**2. ஊரகப் பகுதிகளில் 500 அங்கன்வாடி மையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டப்படும்**

குழந்தைகளின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தில் அங்கன்வாடி மையங்கள் முக்கிய பங்களிக்கின்றன. ஊரகப் பகுதிகளில் உள்ள அங்கன்வாடி மையங்களுக்கு நிலையான கட்டடங்களின் தேவை உள்ளது. 500 அங்கன்வாடி மையங்களுக்கு புதிய கட்டடங்கள் 87 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

**3. ஊரகப் பகுதிகளில் 500 முழுநேர நியாய விலைக் கடைகள் 61 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்**

ஊரகப் பகுதிகளில், மக்கள் உணவுத் தானியங்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களை எளிதில் பெறும்பொருட்டு, 500 முழுநேர நியாய விலைக் கடைகள் 61 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

**4. தமிழ்நாடு அரசின் “பசுமை தமிழ்நாடு இயக்கத்தை” முன்னெடுத்துச்செல்லும் வகையில் 1 கோடி மரக்கன்றுகள் நடப்படும்**

புவி வெப்பமடைதலை தடுத்திடவும், ஊரகப் பகுதிகளின் பசுமையை அதிகரிக்கவும், 1 கோடி மரக்கன்றுகள் தொண்டு நிறுவனங்கள் மற்றும் தொழில் நிறுவனங்களுடன் இணைந்து அரசு நிலங்கள், நிறுவனங்கள் மற்றும் சாலையோரங்களில் நடப்படும்.

**5. ஊரகப் பகுதிகளில் 500 அரசுப் பள்ளிகளில் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சுற்றுச் சுவர் கட்டப்படும்**

ஊரகப் பகுதிகளில் உள்ள பள்ளிக் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்யும்பொருட்டு, 500 ஊராட்சி ஒன்றிய ஆரம்ப/நடுநிலை மற்றும் அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கு, சுற்றுச் சுவர் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும். அரசுப் பள்ளிகள் அனைத்துக்கும் சுற்றுச் சுவர் கட்டப் போகிறோம்.

**6. ஊரகப் பகுதிகளில் இயற்கை மற்றும் நீர்வளப் பணிகள் 500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்**

நீர்வளத்தை மேம்படுத்த குளங்களையெல்லாம் complete ஆக தூர்வாரி குடிமராமத்து என்று சொல்கிறார்கள் அல்லவா! அந்த குடிமராமத்து திட்டத்தின்கீழ், அதற்கான பணிகள் சிறப்பாகச் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஊரகப் பகுதிகளில் இயற்கை மற்றும் நீர்வள ஆதாரத்தைப் பெருக்கவும், சமுதாய நிலங்களை மேம்படுத்தவும், நிலத்தடிநீர் மட்டத்தினை உயர்த்திடவும், புதிய குளங்கள் அமைத்தல், மரக்கன்றுகள் நடுதல் மற்றும் சமுதாய நிலங்களை சமன்படுத்தி மேம்படுத்துதல் போன்ற பணிகள் 500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

**7. ஊரகப் பகுதிகளில் உள்ள மண் சாலைகள் 150 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஓரடுக்கு கப்பிச் சாலைகளாகத் தரம் உயர்த்தப்படும்**

குக்கிராமங்களை இணைக்கும் விதமாகவும் மற்றும் விவசாயிகள் விளைநிலங்களுக்குச் செல்லவும், தங்களது விளைபொருட்களை சந்தைகளுக்கு விரைவாக எடுத்துச்செல்லவும், ஊரகப் பகுதிகளில் உள்ள மண் சாலைகள் 150 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஓரடுக்கு கப்பிச் சாலைகளாகத் தரம் உயர்த்தப்படும்.

**8. ஊரகப் பகுதிகளில் உள்ள தெருக்கள் மற்றும் சந்துகளை மேம்படுத்தும் பணிகள் 350 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்**

ஊரகக் குடியிருப்பு பகுதிகளில் உள்ள குறுகலான தெருக்கள் மற்றும் சந்துகளில் போக்குவரத்திற்குத் தேவையான சாலை வசதிகளை ஏற்படுத்திட சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் மற்றும் பேவர்பிளாக் சாலைகள் அமைத்தல் பணிகள் 350 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

**9. ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் குழந்தை நேய வகுப்பறைகள் 182 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்**

கடந்த மூன்று ஆண்டுகளாக ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் குழந்தை நேய வகுப்பறைகள் ஊரக வளர்ச்சித் துறைமூலம் கட்டப்பட்டு வருகின்றன. 20252026 ஆம் ஆண்டில், ஊரகப் பகுதிகளில் புதிதாக குழந்தை நேய வகுப்பறைகள் 182 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

**10. ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பழுதுபார்த்தல் மற்றும் புனரமைத்தல் பணிகள் 60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்**

கடந்த நான்கு ஆண்டுகளில் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் பெருமளவில் பழுதுபார்க்கப்பட்டு வருகின்றன. 20252026 ஆம் ஆண்டிலும் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பழுதுபார்த்தல் மற்றும் புனரமைப்புப் பணிகள் 60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

**11. ஊரகப் பகுதிகளில் 800 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உயர்மட்ட பாலங்கள் அமைக்கப்படும்**

ஊரகப் பகுதிகளில் உள்ள விவசாயிகள் விளைபொருட்களை சந்தைப்படுத்தவும் குக்கிராமங்களிலிருந்து பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் மருத்துவமனைகள் போன்ற அத்தியாவசிய தேவைகளை அனைத்து பருவகாலங்களிலும் சென்றடைவதற்கு கிராமச் சாலைகளில் உயர்மட்ட பாலங்கள் கட்டப்பட்டு வருகின்றன. 20252026 ஆம் ஆண்டில் ஊரகப் பகுதிகளில் உள்ள ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளில் 800 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உயர்மட்ட பாலங்கள் அமைக்கப்படும்.

**12. ஊரகப் பகுதிகளில் 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1,200 புதிய மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள் கட்டப்படும்**

ஊரக வீடுகளுக்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் தடையற்ற குடிநீர் விநியோகிப்பதை உறுதி செய்யும் பொருட்டு, 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1,200 புதிய மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள் கட்டப்படும்.

**13. நகர்ப்புரத்தை ஒட்டியுள்ள 690 ஊராட்சிகளுக்கு சிறப்பு நிதியாக 69 கோடி ரூபாய் வழங்கப்படும்**

தமிழ்நாட்டில் நகர்ப்புரத்தை ஒட்டியுள்ள 690 ஊராட்சிகளுக்கு குடிநீர், சுகாதாரம், சாலை பராமரிப்பு போன்ற பணிகளை மேற்கொள்ள ஏதுவாக தற்போது வழங்கப்படும் மாநில நிதிக் குழு பகிர்மான நிதியுடன் சிறப்பு நிதியாக 10 இலட்சம் ரூபாய் வீதம் 69 கோடி ரூபாய் மானியமாக வழங்கப்படும்.

**14. தமிழ்நாட்டில் உள்ள 278 மலைக் கிராம ஊராட்சிகளுக்கு சிறப்பு நிதியாக 30 கோடி ரூபாய் வழங்கப்படும்**

தமிழ்நாட்டில் மலைப்பகுதிகளில் உள்ள 278 மலைக்கிராம ஊராட்சிகளுக்கு, குடிநீர், சுகாதாரம், சாலை பராமரிப்பு போன்ற பணிகளை மேற்கொள்ள ஏதுவாக தற்போது வழங்கப்படும் மாநில நிதிக் குழு பகிர்மான நிதியுடன் சிறப்பு நிதியாக 30 கோடி ரூபாய் மானியமாக வழங்கப்படும்.

**15. வன உரிமைச் சட்டத்தை சிறப்பாகச் செயல்படுத்தும் கிராம ஊராட்சிகளுக்கு 10 கோடி ரூபாய் சிறப்பு நிதி வழங்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி)**

வன உரிமைச் சட்டத்தை சிறப்பாகச் செயல்படுத்தும் கிராம ஊராட்சிகளுக்கு ஊக்கமளிக்கும் வகையிலும், வனப்பகுதியை ஒட்டியுள்ள மக்களுக்கு வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையிலும் அவ்வூராட்சிகளில் அடிப்படைக் கட்டமைப்புகளை மேம்படுத்திட ஏதுவாக, தற்போது வழங்கப்படும் மாநில நிதிக் குழு பகிர்மான நிதியுடன் சிறப்பு நிதியாக 10 கோடி ரூபாய் மானியமாக வழங்கப்படும்.

**16. துப்புரவுப் பணியாளர்களின் நலப் பணிகளுக்காக துப்புரவுத் தொழிலாளர்கள் நல வாரியத்திற்கு 5 கோடி ரூபாய் வழங்கப்படும்**

கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் துப்புரவுப் பணியாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில், துப்புரவுத் தொழிலாளர்கள் நல வாரியத்திற்கு 5 கோடி ரூபாய் நிதி வழங்கப்படும்.

**17. 10 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் இந்தாண்டு புதிதாக கட்டப்படும் (மேசையைத் தட்டும் ஒலி)**

ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களுக்கு வருகைதரும் பொதுமக்களின் வசதிக்காகவும், ஊராட்சி ஒன்றிய அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் நல்ல அலுவலக சூழலில் பணியாற்ற ஏதுவாகவும், பழைய, பழுதடைந்த கட்டடங்களுக்குப் பதிலாக 10 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் தலா 5.90 கோடி ரூபாய் வீதம் மொத்தம் 59 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

**18. நமக்கு நாமே (ஊரகம்) திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு 150 கோடி ரூபாயாக உயர்த்தப்படும் (மேசையைத் தட்டும் ஒலி)**

கடந்த ஆண்டில் நமக்கு நாமே திட்டத்தை செயல்படுத்துவதற்காக 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்திட்டத்திற்கு பொதுமக்களிடம் பெருமளவில் வரவேற்பு உள்ளதால், 2025 2026 ஆம் ஆண்டிற்கு 50 கோடி ரூபாய் கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, மொத்தம் 150 கோடி ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

**19. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின்மூலம் கட்டப்பட்டுள்ள பல்வேறு அலுவலக மற்றும் பொது பயன்பாட்டு கட்டடங்களைப் பராமரிக்க விரிவான பராமரிப்பு கொள்கை வகுக்கப்படும்**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின்மூலம் கட்டப்பட்டுள்ள பள்ளிகள், கிராம ஊராட்சி அலுவலகங்கள், ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள், மகளிர் சுய உதவிக் குழு கட்டடங்கள், சமுதாயக் கூடங்கள், நூலகக் கட்டடங்கள், பேருந்து நிலையங்கள் போன்ற பல்வேறு அலுவலக மற்றும் பொது பயன்பாட்டுக் கட்டடங்களை புனரமைத்து முறையாகப் பராமரிப்பதற்காக, விரிவான பராமரிப்புக் கொள்கை (Building Maintenance Policy) வகுக்கப்படும். 20252026 ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் இதற்கென மாநில நிதிக் குழு மானியத்திலிருந்து 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

**20. பொதுமக்களின் பயன்பாட்டிற்காக கிராமப்புறங்களில் மக்கள் அதிகமாகக் கூடும் இடங்களில் 1,500 சமுதாய சுகாதார வளாகங்கள் கட்டப்படும்.**

Rest room கட்டப்படும்.

கிராமப்புறங்களில் நூலகங்கள், பள்ளிகள், அங்கன்வாடிகள் மற்றும் அரசு கட்டடங்களுக்கு அருகில் உள்ள பொது இடங்களில் மக்கள் அதிகமாகக் கூடம் இடங்களில் அனைத்து அடிப்படை வசதிகள் கொண்ட 1,500 சமுதாய சுகாதார வளாகங்கள் 31.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

இவ்வாறு அமைச்சர் இ.பெரியசாமி உறுப்பினர்களின் மேசையைத் தட்டும் ஒலிகளுக்கிடையே அறிவிப்புகளை வெளியிட்டார்.